**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No.64/2016**
செல்வி. தீபா (P.W.–3) **07.04.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. என்ன படித்துள்ளேன் என்றால் பட்டப்படிப்பு படித்துள்ளேன். எங்கு வேலை பார்க்கிறேன் என்றால் பள்ளியில் 15 வருடங்களாக வேலை பார்க்கிறேன். எதற்காக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் இறந்து போன என்னுடைய தகப்பனார் மற்றும் சகோதரரின் இறப்புச் சான்றிதழ் கொடுத்ததை பொறுத்து சாட்சியம் அளிக்கிறேன். அதை தவிர தாவா மற்ற சங்கதிகள் எனக்குத் தெரியாது என்றால் ஆமாம். தாவா சொத்து எங்களுடைய குடும்ப சொத்து என்றால் சரி. அது மொத்தம் எத்தனை ஏக்கர் என்றால் தெரியாது.

2. தாவா சொத்துக்கள் 40 அடி பாதை விடப்பட்டு பாகப்பிரிவினை ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள் என்றால் அந்த விபரங்கள் எனக்கு தெரியாது பாகம் ஏற்பட்டது. என்னுடைய தகப்பனார் உயிருடன் இருந்தவரை என்னுடன் நல்ல உறவில் இருந்தாரா என்றால் என் அப்பா தனியாக இருந்து வந்தார் என்னுடைய அப்பா நல்ல உறவில் என்னுடன் இருந்தாரா என்றால் இல்லை. என்னுடைய சகோதரர் என்னுடன் நல்ல உறவில் இருந்து வந்தார் என்றால் ஆமாம். இறப்பதற்கு இரண்டு வருட பிரச்சனையானது.

3. என்னுடைய தகப்பனார் உயிருடன் இருந்த சமயத்தில் என்ன சொத்துக்களை யாருக்கு விற்பனை செய்தார் என்பதை பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை தெரியாது. தாவா சொத்துக்களான 24.70

ஏக்கரில் எனக்கு சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால் ஆமாம். என்னுடைய தகப்பனார் கோயம்புத்தூரில் இறப்பதற்கு முன்பு வசித்து வந்தார் என்பதற்கு ஆவணங்கள் இல்லை என்றால் உள்ளது இறப்புச் சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். அதை தவிர வேறு ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை.

4. என் தகப்பனார் இறந்த பிறகு மின் மயானத்தில் தகனம் செய்யப்பட்டதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. என்னுடைய சகோதரர் முருகானந்தம் தற்கொலை செய்து கொண்டதால் அதை பொறுத்து வடக்கு காவல் நிலையத்தில் வழக்கு இருப்பதாக சொல்லி உள்ளேன் என்றால் ஆமாம். அதற்கு எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் முதல் தகவல் அறிக்கை உள்ளது. அதை தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் இல்லை. முருகானந்தம் மின் மயானத்தில் தகனம் செய்யப்பட்டதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் ரசீது கொடுத்துள்ளேன்.

5. ரசீதை யாரிடம் கொடுத்தீர்கள் என்றால் வாதி வழக்கறிஞரிடம் கொடுத்தேன். 2007 ஆம் வருடம் பாகம் பிரித்துக்கொண்ட போது நான் அந்த இடத்தில் இல்லை என்றால் சரி. அதன் விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரி. பாகப்பிரிவினை ஆவணத்தையும் நான் பார்க்கவில்லை என்றால் சரி. என்னுடைய சகோதரி சந்தியாவிற்கும் எனக்கும் நல்ல உறவு உள்ளது என்றால் ஆமாம். தற்போது அவர் எங்க வசிக்கிறார் என்றால் ஒட்டன்சத்திரத்தில் வசிக்கிறார். அவருக்குத் தெரிந்து தான் தற்போது சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் ஆமாம்.

6. என்னுடைய தகப்பனார் மற்றும் சகோதரரின் இறப்புச் சான்றிதழ் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்காக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால்

தவறு. இந்த வழக்கு சொத்து ஏற்கனவே 1ம் பிரதிவாதி அசல் வழக்கு எண்.294/2007 இல் சுவாதீனம் பெற்ற பிறகு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. என்னுடைய தகப்பனார் இறந்த பிறகு அவர்களுடைய இறப்பை பதிவு செய்த தேதி என்ன என்றால் 19.11.2015. என்னுடைய தகப்பனார் இறந்த தேதி என்னவென்றால் 22.4.2011.

7. இறப்புச் சான்றிதழ் பெற வேண்டி மனு எங்கே கொடுத்தேன் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. என்னுடைய தகப்பனார் 22.4.2011 ஆம் தேதி இறக்கவில்லை. 2014 ஆம் வருடம் தான் இறந்து போனார் என்றால் தவறு. அதனால் தான் இறப்புச் சான்றிதழ் பெறுவதற்காக கொடுக்கப்பட்ட ஆவண விபரங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய சகோதரர் இறந்த தேதி என்னவென்றால் 29.4 2014. எந்த தேதியில் இறப்புச் சான்றிதழ் பதிவு செய்யப்பட்டது என்றால் 8.12.2015 இல் பதிவு செய்யப்பட்டது. அவ்வாறு காலதாமதமாக இறப்புச் சான்றிதழ் பதிவு செய்ததற்கு கொடுத்த ஆவண விவரங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. என்னுடைய சகோதரர் நான் சொன்ன தேதியில் இறக்கவில்லை. அதனால் தான் மனு விவரங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

8. முதல்வாதி என்னுடைய தாயாரின் சகோதரி என்றால் ஆமாம். அதனால் அவர்கள் வாரிசுதாரர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர்களுக்கு தாவாவில் சொத்துக்கள் கிடைக்க வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. என்னுடைய தகப்பனாருக்கு அவருடைய சொத்துக்களில் உள்ள உரிமையை இன்று வரை நான் கேட்கவில்லை என்றால் சரி. என்னுடைய சகோதரியும் உரிமைகள் எதுவும் இன்றுவரை கூறவில்லை என்றால் ஆமாம். தாவா சொத்துக்களை பொறுத்து வழக்கு நடக்கும் விவரங்கள் தற்போது தான் எனக்கு தெரியும் என்றால் வழக்கு விவரங்கள்

நடப்பதே எனக்கு தெரியாது. முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளவாறு தாவா சொத்துக்கள் ஏ, பி, சி என்று பிரிவினை செய்யப்பட்ட விவரங்கள் எனக்குத் தெரியாது என்றால் தவறு எனக்குத் தெரியும். என்னுடைய சகோதரி அந்த விவரங்களை எனக்கு சொல்லி உள்ளார் எனக்கு நேரடியாக தெரியாது என் சகோதரி சொல்லி பாகப்பிரிவினை விவரங்கள் தெரியும் என்றால் ஆமாம். என்னுடைய சகோதரிக்கு தாவா நடக்கும் விபரங்கள் ஏற்கனவே தெரியும் என்றால் ஆமாம். வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்னுடைய சாட்சியம் ஏற்க தக்க நல்ல என்றால் தவறு.

6ம் பிரதிவாதி அழைத்து ஆஜர். 6ம் பிரதிவாதி தரப்பில் எந்த முறையீடும் இல்லை. 6ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2026.04.07 16:35:16 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.